**தலைப்பு 238 - அரசிறைக் கொள்கைத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின்-தலைப்பு 238 இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவபரவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 26 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மத்திய வங்கியின் இலாப வருமான குறியீட்டு இலக்கம் 20.05.01.00 இன் கீழ் 2021 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப கட்ட வருமான மதிப்பீட்டின் ஊடாக ரூபா 20 பில்லியன் வருமானமொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. ஆரம்ப கட்ட வருமான மதிப்பீட்டினை தயாரித்ததை தொடர்ந்து நம்பத்தகாத விதத்தில் இந்த மதிப்பீடு மேலும், ரூபா 5 பில்லியனால் அதனை ரூபா 25 பில்லியனாக திருத்துவதன் மூலம் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் அந்த வருமான குறியீட்டின் கீழ் ரூபா 15 பில்லியன் தொகையொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த வருமான குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீடு யதார்த்தமாகவும் சரியாகவும் எதிர்வு கூறப்படாமை காரணமாக ஆரம்ப கட்ட மதிப்பீட்டின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட வருமான மதிப்பீட்டில் 75 சதவீதத்தினை மாத்திரம் சேகரிக்கக்கூடியவாறு இருந்தது. | வருமான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது அக்காலத்தில் நிலவும் பொருளாதார நிலைமை கருத்திற் கொள்ளப்படுகின்றது. 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் இலாபமாக ரூபா 30 மில்லியன் தொகையொன்று திறைசேரிக்கு 2022 பெப்ரவரியில் அனுப்பப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 அன்று இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் மூடப்பட்டதன் பின்னர் இலாபங்கள் வழங்கப்பட்டுள்ளன. வருமானக் கணக்கினை தயாரிக்கும் போது வருமானம் காசு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது மற்றும் அட்டுறு வருமானத்தினை கருத்திற்கொள்ள முடியாது. | மதிப்பீடுகள் யதார்த்தமாகவும் சரியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் வருமான குறியீடு 1002.10.00 இன் கீழ் சமூகப்பொறுப்பு வரியாக ரூபா 64,598,346 தொகையொன்று நிலுவையாக இருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் அந்த நிலுவை தொகையில் 0.01 சதவீதம் அல்லது ரூபா 5,820 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த நிலுவை வருமானத்தில் ரூபா 1,449,239 தொகையொன்று பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது மற்றும் அந்த வருமான குறியீட்டின் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட ரூபா 63,143,287 தொகையான வருமானம் நிலுவையாக காணப்படுகின்றது. | வருமான குறியீடு 1002.10.00 இன் கீழ் காணப்படும் சமூகப்பொறுப்பு விரியினை சேகரிக்கும் நிறுவனங்களாக காணப்படும் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் சுங்க திணைக்களம் என்பன நிலுவையான வருமானத்தினை சேகரிப்பதற்கான பொறுப்பினையும் கொண்டிருக்க வேண்டும். இந்த திணைக்களம் அடிக்கடி நினைவூட்டல்களை அனுப்புவதற்கும் தொடர்புடைய குழுக்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது மற்றும் எவ்வித தாமதமும் இன்றி நிலுவையான வருமானத்தினை சேகரிப்பது பற்றி அவ்வாறான குழுக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. | நிலுவையான வருமாத்தினை உடனடியாக சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **பலனற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு** | | |
| | செலவின விடயம் 238-1-1-1102 இற்காக ரூபா 1,000,000 நிகர ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாத காரணத்தினால் மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டிற்காக செலவின விடயம் 238-1-1-0-1102 இற்காக ரூபா 3,000,000 ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அந்த தொகையில் ரூபா 2,000,000 தொடர்பிலான ஏற்பாட்டிற்கு செயல் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது மற்றும் கொவிட் - 19 தொற்று பரவல் காரணமாக வெளிநாட்டு பயிற்சி மற்றும் கருத்தரங்குகளில் திணைக்கள உத்தியோகத்தர்களின் பங்கேற்பு ரத்து செய்யப்பட்டமை காரணமாக மீதமுள்ள ஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை. | நிதி ஒழுங்கு விதி 50 இன் பிரகாரம், வருடாந்த செலவின மதிப்பீடு யதார்த்தமாகவும் சரியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

(ஆ) **மிகையாக ஏற்பாடு செய்தல்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 05 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 25,598,373 மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது மற்றும் அந்த தொகையில் ரூபா 15,488,341 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ரூபா 10,110,032 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு செலவு விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட நிகர ஏற்பாட்டில் 16 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சில் அந்த சேமிப்பு காணப்பட்டது. | திட்டமிட்டதன் பிரகாரம், திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை, வட்டி வீதங்கள் குறைவடைவதன் காரணமாக வட்டி கொடுப்பனவின் பெறுமதி குறைவடைந்தமை, கொவிட் - 19 தொற்று காரணமாக கடமைக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் ஆண்டறிக்கைகளும் பாதீட்டு அறிக்கைகளும் நிதி அமைச்சின் செலவில் தயாரிக்கப்பட்டமை காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நிதி ஒழுங்கு விதி 50 இன் பிரகாரம், வருடாந்த செலவின மதிப்பீடு யதார்த்தமாகவும் சரியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத நிகழ்வுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் 2021/03 ஆம் இலக்க வழிகாட்டல் | காசுப்பாய்ச்சல் கூற்று மொத்த அடிப்படையில் தயாரிக்கப்படாமை காரணமாக, செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலில் கிடைக்கப்பெற்ற முற்பணம் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,749,698 மற்றும் ரூபா 2,513,761 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படவில்லை. காசுப்பாய்ச்சலில் ஏற்பட்ட மாற்றங்கள் மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுகின்றன மற்றும் குறுக்கு பதிவுகள் (Cross Enters) ஊடாக இடம்பெற்ற கொடுக்கல், வாங்கல்களின் பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டதால் நிறுவனத்தின் உண்மையான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்கள் | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களை பின்பற்றி நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது நெறிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காசுப்பாய்ச்சல் கூற்றில் மிகையாக காட்டப்பட்டுள்ளன. குறுக்குப் பதிவுகள் ஊடாக மொத்த செலவுக்கு கொடுக்கல் வாங்கல்கள் சீராக்கப்பட்டதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிகள் தான் காசுப்பாய்ச்சல் கூற்றில் செலவினமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. | |
| (ஆ) | நிதி ஒழுங்கு விதிகள் 104 மற்றும் 110 | திணைக்களத்தின் வாகனமொன்றுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பில் ஒரு முழுமையான அல்லது ஆரம்பகட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது மற்றும் இந்த நட்டம் நட்டங்களின் பதிவேடுகளில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம். அறிக்கையிடப்பட்ட சேதத்திற்கு தொடர்புடைய கோவையின் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் நட்டங்களின் பதிவேட்டில் குறிப்பிட்டு ஆரம்பகட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 62 பதவிகளில் 16 பதவிகள் வெற்றிடமாகவே காணப்பட்டன. அந்த வெற்றிடமான பதவிகளில் 06 சிரேஷ்ட நிலை பதவிகளும் காணப்பட்டன. | தற்போதுள்ள அலுவலக அறைகள் போதுமானதாக இல்லாமை காரணமாக வெற்றிடங்களில் உள்ள 06 சிரேஷ்ட நிலை பதவிகளையும் நிரப்புவதற்கு சாத்தியம் காணப்படவில்லை. நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய பதவிகளில் தற்போது 07 வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |